சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.121/2022

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ம் நாள் பி.வா.சா.3 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வி | வயது | 34 |
| க/பெ | வேலுச்சாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பெள்ளேபாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | கிராம நிர்வாக அலுவலர |

முதல் விசாரணை :

நான் பெள்ளேபாளையம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வட்டாட்சியருக்கு அழைப்பாணை வந்துள்ளது. மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் என்னை சாட்சியம் அளிக்க அதிகாரம் வழங்கி உள்ளார். அழைப்பாணையில் உள்ள படி பெள்ளேபாளையத்தை சேர்ந்த அய்யாக்குட்டியின் வாரிசுகளை பற்றி விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்ற விபரம் அவர் இறந்து சுமார் 110 ஆண்டுகள் இருக்கும் என்பதால் அங்கு உள்ளவர்களுக்கு சரியாக தெரியவில்லை. அவருக்கு எத்தனை மனைவிகள் இருந்தார்கள் என்று விசாரித்தேனா என்றால் அவருக்கு இரண்டு மனைவிகள் இருந்ததாக என்னுடைய விசாரணையில் தெரிய வந்தது. அவரது மனைவிகளின் பெயர் விசாரணையில் தெரிய வரவில்லை. இரண்டு மனைவிகளின் பெயருமே யாருக்கும் தெரிய வில்லை. அய்யாக்குட்டியின் முதல் மனைவியின் வாரிசுகள் பற்றிய விபரம் தெரிந்ததா என்றால் வாரிசுகள் இருப்பதாக கூறினார்கள். ஆனால் யார் யார் வாரிசுகள் என்று யாருக்கும் சரியாக தெரிய வில்லை. அய்யாக்குட்டியின் இரண்டாவது மனைவியின் வாரிசுகள் பெள்ளேபாளையத்தில் உள்ளார்களா என்றால் பழனியம்மாள் என்ற அய்யாக்குட்டியின் மகன் வழிப் பேத்தி இருப்பதாக தெரிய வந்தது. அந்த மகன் இரண்டாவது மனைவியின் மகன் என்று விசாரணையில் தெரியவந்தது. பழனியம்மாளுக்கு தற்போது 55 வயது இருக்கும்.

பழனியம்மாளிடம் அவரது தகப்பனார் மற்றும் தகப்பனாருடன் பிறந்தவர்கள் ஆகியவர்களின் விபரங்களை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அவருக்கே சரியாக விபரம் தெரியவில்லை. பழனியம்மாள் உடன் பிறந்தவர்கள் மற்றும் அவரது தாயாருடன் பிறந்தவர்கள் பற்றி விசாரித்தேனா என்றால் நான் அய்யாக்குட்டியின் வாரிசுகள் பற்றி மட்டுமே விசாரித்தேன். வழக்குச் சொத்துக்கள் பெள்ளேபாளையம் கிராமத்தில் உள்ளது என்றால் அது பற்றி நான் விசாரிக்கவில்லை. அந்த சொத்துக்கள் பற்றிய வருவாய் ஆவணங்களை கொண்டு வந்து உள்ளேனா என்றால் கொண்டு வந்து உள்ளேன். ஒரு நபரின் வாரிசுகள் இந்த ஊரில் உள்ளார்களா இல்லையா என்பதை விசாரிக்க வேண்டியது என்னுடைய கடமை என்றும் அந்த கடமையை நான் சரியாக செய்ய வில்லை என்றால் சரி யல்ல. நான் சம்பந்தப்பட்ட வாரிசுகளை விசாரணைக்கு அழைக்க வில்லை என்றால் சரி யல்ல. என்னுடைய விசாரணை சரியாக இல்லை என்றால் யாரை விசாரிக்க வேண்டும் என்றால் வட்டாட்சியரை தான் விசாரிக்க வேண்டும். நான் கொண்டு வந்துள்ள ஆவணங்களில் கண்ட சொத்து பெள்ளேபாளையம் கிராமத்தில் தான் உள்ளது. பெள்ளேபாளையத்தில் சொத்துக்கள் உள்ள போது நான் அந்த கிராம நிர்வாக அலுவலராக இருந்து கொண்டு அந்த சொத்துக்களை பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளிப்பது முறையானது அல்ல என்றால் சரி யல்ல. நான் மீண்டும் வாரிசுகளுக்கு அறிவிப்பு கொடுத்து முறையாக விசாரிக்க வேண்டும் என்றால் நான் விசாரித்த வரை அவ்வளவு தான் விபரம் தெரிந்தது. அய்யாக்குட்டியின் வாரிசுகள் விபரம் பற்றி நான் விசாரித்த விபரம் முழுமையானதாக இல்லை என்றால் சரி யல்ல.

( ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக சாட்சியின் வேண்டுகோளின் படி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.